# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 08.04.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களின் சம்பவங்கள் தொடர்பாக கூற விரும்புகிறேன். இதற்கு முன்னரும் பலமுறை நான் இந்த சம்பவங்களைப் பற்றி கூறியுள்ளேன். புதிய சஹாபாக்கள் தொடர்பான சம்பவங்களைக் கூற முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் பதிவு செய்யப்பட்டுள்ள சஹாபாக்களின் பதிவேட்டிலிருந்து நான் தேர்ந்தெடுத்துள்ளேன். இதன் மூலம் அந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையில் பைஅத் செய்த சஹாபாக்கள் அவரை எவ்வாறு எண்ணினார்கள். அன்னாருடைய தாக்கம் அவர்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது என பலவிதமான கோணத்தில் பலரின் அறிவிப்புகளில் காண முடிகிறது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களும் குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகள் மூலம் இந்த சம்பவங்களைத் தொடர்ச்சியாக கூறியுள்ளார்கள். என்னுடைய முயற்சி என்னவென்றால், அவர்கள் கூறிய சம்பவங்களும், நான் கூறிய முந்தைய சம்பவங்களும் நம்முன் வராமல் புதிய சஹாபாக்களின் புதிய சம்பவங்கள் நம்முன் வர வேண்டும்.

இந்த அறிவிப்புகள் மூலம் நாம், சஹாபாக்களின் கபடமின்மை மற்றும் விசுவாசத்தின் முன்மாதிரியையும், அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட சம்பவத்தையும் அறிகின்றோம். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தகுதி மற்றும் அன்னாருடைய சஹாபாக்களின் மீது வைத்துள்ள தொடர்பையும் நாம் அறிகின்றோம். ஒரு சில பிரச்சனைகளுக்கும் இதில் தீர்வுகள் உள்ளன. எவ்வாறிருந்த போதிலும், நான் கூறியது போன்றே ஒரு சில சம்பவங்களைக் கூறுகின்றேன். அது தூய ஜமாஅத்தின் ஒரு பகுதியாகத் திகழட்டும். இவர்களைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விசுவாசம் மற்றும் பற்றுதலில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார்கள் என கூறியுள்ளார்கள்.

முதல் அறிவிப்பு ஹஸ்ரத் ஹாஃபிஸ் முஹம்மத் இப்ராஹீம் சாஹிப் உடையதாகும். இவரது தந்தை பெயர் மீர் நாஸிர் அலி சாஹிப் ஆவார். இவர்களின் பைஅத் மற்றும் சந்திப்பின் வருடம் 1900 ம் வருடமாகும்.

இவர் எழுதுகிறார்: நான் 1899 ஆம் ஆண்டு கடிதம் மூலம் பைஅத் செய்தேன். இதற்கு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பைஅத் செய்வதற்காக என் தந்தையார் என்னை அனுப்பினார்கள். ஆனால் நான் சில காரணங்களால் பைஅத் செய்யாமல் வீட்டிற்குப் போய் விட்டேன். இதன் பின்னர் எங்கள் நெருங்கிய நண்பரும் ஆசிரியருமாகிய செய்யத் பாலர் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அப்போது வரை எழுதி வெளியிட்ட ஏறத்தாழ அனைத்து புத்தகங்களையும் வாசித்துக் காட்டினார்கள்.

அதே நாட்களில் நான் ஒரு கனவு கண்டேன். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்தார்கள். நான் எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம், ஹுஸூர்... மிர்ஸா சாஹிப் தன்னை மஹ்தி, மஸீஹ் என்று வாதிக்கின்றாரே; அவர் தன் வாதத்தில் உண்மையாளரா? என்று கேட்கிறேன். இதற்குப் பதிலளித்தவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம் அவர் உண்மையாளர்தான் எனக் கூறினார்கள். நான் கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எஜமானரே சத்தியம் செய்து கூறுங்கள் என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனக்கு சத்தியம் செய்வதற்கான அவசியம் இல்லை. நான் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) ஆவேன். மேலும் நான் வானம் மற்றும் பூமியின் அமீனாக உள்ளேன் எனக் கூறினார்கள்.

இதற்குப் பிறகு காலையில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கடிதம் எழுதினேன். அந்த கடிதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸலாத்தையும் எட்ட வைத்து விட்டேன். அதன்பிறகு 1900வது ஆண்டில் காதியான் சென்று ஹுஸூர் அவர்களின் கையில் பைஅத் செய்தேன்.

ஹஸ்ரத் மாஸ்டர் ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் ஜவ்வர் அவர்கள் எழுதுகிறார்கள். இவருடைய பைஅத்தின் ஆண்டு 1896. எனக்கு 14 வயது இருக்கும் போது நான் கடிதம் மூலம் பைஅத் செய்தேன். எனது தந்தை மவ்லவி ஷேக் ஆலம் சாஹிப் (ரலி). தனது சகோதரர் மவ்லவி கரீபுல்லாஹ் சாஹிப் மவ்லவி சாஹிபுடன் 1889 ஆம் ஆண்டு காதியானில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டிற்குச் சென்றார்கள். டிசம்பர் மாத தொடக்கத்திலேயே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் காதியானில் இருந்தார்கள். இவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கரம்தீன் வழக்கு தொடர்பாக ஜெஹ்லம் சென்றபோது நான் ஜரீயுல்லாஹ் (அல்லாஹ்வின் பயில்வான்) உடன் இருந்தேன். மேலும் 1907 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டிலிருந்து ஒன்றரை வாரம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருந்து அவர்களுடைய கடைசி தரிசனத்தைப் பெற்றேன்.

மேலும் இவர் எழுதுகிறார்: ஹஸ்ரத் ஜரீயுல்லாஹ்வின் முதல் சந்திப்பில் ஐந்து வேளை தொழுகையில் இந்த அடியேன் ஹுஸுர் (அலை) அவர்களுக்கு அருகில் முதல் வரிசையில் வலது, அல்லது இடது புறத்தில் நிற்பேன்.

அந்நாட்களில் ஹுஸுர் (அலை) அவர்கள் ஐந்து வேளை தொழுகைக்குப் பிறகு மஸ்ஜித் முபாரக்கில் அரை மணி நேரம் அல்லது அதை விட கூடுதலாக தமது அன்பார்ந்த குத்தாம் சகோதரர்களுக்கு விலை உயர்ந்த அறிவுரைகளை வழங்கினார்கள். இரவு உணவை அதிகமான நாட்களில் பள்ளிவாசலிலேயே சாப்பிட்டு வந்தார்கள்.

குறிப்பாக ஃபஜ்ர் மற்றும் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு இஷா தொழுகை வரை தனது நேசர்களுக்கும் தியாகிகளுக்கும் தினமும் அறிவுரை மற்றும் போதனைகளை வழங்கி பலன்பெறச் செய்தார்கள்.

இந்த தினங்களில் இந்த அடியானுக்கு தினமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கை, கால்களை பிடித்து விடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது எனக்கு சிறு வயதாக இருந்ததால், ஹுஸுர் (அலை) அவர்களிடம் மரியாதை நிமித்தமாகவும், நபியாக இருக்கின்ற காரணத்தால் நான் அவர்களிடம் எதுவும் பேசுவதில்லை. அவர்களின் ஒவ்வொரு பேச்சும் மிகவும் அன்பானதாகவும் ஆதரவானதாகவும் இருந்தது. ஆனால் இறைவனது நபி என்ற அச்சத்தின் காரணத்தால் இந்த அடியேனுக்கு எதுவும் பேச தைரியம் வரவில்லை. இது என்னுடைய தவறாகும். நான் ஹுஸுர் (அலை) அவர்களின் சேவையில் எந்தவொரு வேண்டுகோளையும் விடுத்ததில்லை. ஹுஸுர் (அலை) அவர்களுடைய தூய்மையான வார்த்தைகளை அமைதியான முறையில் கேட்டுக் கொண்டிருந்தேன். ஒருநாள் ஹுஸுர் (அலை) அவர்கள் சத்தார் ஃபஸ்ல் ஹக் சாஹிப் அஹ்மதி (ரலி) அவர்கள் தொடர்பாக கூறினார்கள். எவராவது ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளைப் பார்க்க விரும்பினால் அவர் சத்தார் சாஹிபை பாருங்கள். இவர் உலகத்தின் செல்வத்தை எட்டி உதைத்து விட்டு இஸ்லாத்தின் உலர்ந்த ரொட்டியை ஏற்றுக் கொண்டார்.

மீண்டும் இவ்வாறு எழுதுகிறார்கள். மீர் முன்ஷி மிர்ஸா ஜலாலுத்தீன் சாஹிப் அஹ்மதி மர்ஹூம் என்னுடைய தாய் மாமன் ஆவார். ஹுஸுர் (அலை) அவர்கள் கிதாபுன் ஜாமிஆர் என்ற புத்தகத்தின் பட்டியலில் 313 சஹாபாக்களில் இவருடைய பெயரை முதல் வரிசையில் வைத்துள்ளார்கள். இவரது நட்பின் பயன்பெற்ற ஸெய்யத் குலாம் ஷா சாஹிப் மர்ஹூம் அஹ்மதி (ரலி) அவர்கள் சக்னா நூரான், காதியான் தாசில்தார் மற்றும் மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் (ரலி) அஹ்மதி மர்ஹூம் ஜெஹ்லம் இவர்களின் நட்பில் பலன்பெற்றவாறே அடியேன் மற்றும் எனது தந்தையார் இருவருக்கும் அஹ்மதிய்யத்தின் அருட்கொடை கிடைத்தது. ஸெய்யத் சாஹிப் மர்ஹூம் (ரலி) அவர்கள் மற்றும் மவ்லவி சாஹிப் மர்ஹூம் (ரலி) என்னுடைய தந்தையின் சம காலத்தவர் ஆவார்கள்.

சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியானின் முன்னாள் ஆடிட்டர் மிர்ஸா முஹம்மத் அஷ்ரஃப் சாஹிப் எனது மாமி மகன் ஆவார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், தாங்கள் எங்கள் அச்சகத்திற்கு வருகை தாருங்களேன் என்று ஒருவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

அவர்கள், மன்னியுங்கள்; நான் அங்கு வர முடியாது. ஏனென்றால் அங்கு ஹுக்கா (புகைக்கப் பயன்படும் குழாய்) வைத்துள்ளனர். அதைப் பார்த்தவுடன் தலை முதல் கால் வரை வெட்கத்தில் சிலிர்த்து விடுகின்றேன். ஆனால் ஹுக்கா பிடிப்பவர்களை உள்ளத்தால் கெட்டவன் என்று நினைக்கவில்லை.

மேலும் கூறினார்கள். மக்கள் பைஅத் செய்வதற்காக என்னிடம் வருகிறார்கள். அவர்களுடைய தாடி ஒரு புறமாக இருக்கும். அவர்களின் வாயிலிருந்து மதுவின் வாசம் வீசும் அவர்களையும் நான் உள்ளத்தால் கெட்டவர்கள் என நினைக்கமாட்டேன். ஏனென்றால் அவர்கள் என்னுடன் தங்கினாலோ அல்லது என்னிடம் அதிகமாக வந்தாலோ கண்ணியமிக்க இறைவன் அவர்களை கண்டிப்பாக தூய்மையாகவும் சுத்தமாகவும் மாற்றி விடுவான் என்பது நமது நம்பிக்கை ஆகும்.

பிறகு இன்னொரு அறிவிப்பு வஸீராபாத்திலுள்ள ஹஸ்ரத் ஹாஃபிஸ் குலாம் ரஸூல் சாஹிப் உடையதாகும். தந்தை பெயர் ஹாஃபிஸ் முஹம்மது ஹுஸைன் சாஹிப் சக்னா வஸீராபாதி குஜ்ரான்வாலா. இவர்களுடைய பைஅத் 1897 –ல் நடந்ததாகும். இவர்கள் கூறுகின்றார்கள். காதியான் தாருல் அமானில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எம்.ஏ அவர்கள் வாழ்ந்து வந்த வீட்டின் கதவு கூரை போட்ட சந்தின் கீழ் உள்ளது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சில நண்பர்களை ஒன்றுசேர்த்து உரையாற்றினார்கள். நான் மேல்நிலைப்பள்ளியை மக்கள் இங்கிருந்து கல்வியைப் பெற்று இறைவனது படைப்பினங்களுக்கு உண்மையைப் பரப்புவதற்காகவே நிறுவினேன். ஆனால் கவலைக்குரிய விஷயம் என்னவென்றால், மக்கள் ஆங்கிலத்தைப் படித்து விட்டு தனது வியாபாரத்தால் ஈடுபட்டு விட்டார்கள். இதன் மூலம் எனது குறிக்கோள் நிறைவேறுவதில்லை. எனவே நான் மார்க்கத்திற்காக மட்டும் ஒரு மத்ரஸாவை நிறுவலாம் என நினைக்கிறேன். தங்களுடைய குழந்தைகளை இறைவனுக்காக இந்த மத்ரஸாவில் சேர்ப்பதற்காக உங்களில் யாராவது உள்ளீர்களா? அந்த நாட்களில் என்னுடைய மகன் உபைதுல்லாஹ் மர்ஹூம் அவனுக்கு 7, 8 வயதுதான் இருக்கும். முஃப்தி முஹம்மத் சாதிக் சாஹிப் அஹ்மதிய்யா மத்ராஸாவின் தலைமை ஆசிரியராக இருந்தவர். அச்சமயம் அந்த சிறுவன் என் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். நான் அவனை ஹஸ்ரத் சாஹிபிடம் ஒப்படைத்து விட்டேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்களது மத்ராஸாவில் சேவகனாகப் பணிபுரிந்த ஃபஸ்லுத்தீன் சியால்கோட்டி என்பவரிடம் ஒப்படைத்து இவனை அஹ்மதிய்யா பள்ளியில் கொண்டு போய் சேர்க்கவும் என கூறினார்கள்.

இந்த உபைதுல்லாஹ்தான் அந்த மத்ரஸாவில் மவ்லவி ஃபாஸில் முடித்து விட்டு பின்னர் மொரூஷியஸ் நாட்டிற்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் காலத்தில் அனுப்பப்பட்டார். ஏழு வருட கால தப்லீக் பணிக்குப் பிறகு அன்னார் இறைவனடி சேர்ந்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடைய அருளுக்குரிய நாவினால், முதல் இந்திய ஷஹீது என்ற பட்டத்தையும் இவர் பெற்றார். அங்கேயே அடக்கப்பட்டார். இது அவருடைய தந்தையார் கூறியதாகும்.

மேலும் கூறுகிறார். குர்தாஸ்பூரில் கரம்தீன் என்பவரின் வழக்கின் நாளாகும். அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் வருவதாக கேள்விப்பட்டார்கள். மேலும் தன்னுடைய வீட்டில் செலவிற்கான ரூபாயும் செலவழிந்து விட்டது என கேள்விப்பட்டார். பிறகு குர்தாஸ்பூர் சென்றார். ஹுஸூர் (அலை) அவர்கள் சுபுஹ் தொழுகைக்குப் பிறகு படுத்திருந்தார்கள். ஒரு மனிதர் அவர்களுடைய கை கால்களை பிடித்து விட்டுக் கொண்டிருந்தார். நானும் அமுக்கி விடத் தொடங்கி விட்டேன். நான் அந்நாட்களில் பலசாலியாக இருந்ததாலும் நம்முடைய முன்னோர்களாகிய ஆசிரியர்களுக்கு தொண்டு செய்ததன் மூலம் கை கால் பிடித்து விடுவதற்கான பழக்கம் இருந்தால் நான் அவ்வாறே செய்து கொண்டிருந்தேன். அப்போது ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கு நான் தான் அமுக்குகிறேன் என்ற எண்ணம் தோன்றியது. உடனே தன்னுடைய முகத்திலிருந்து போர்வையை அகற்றி விட்டு என்னைப் பார்த்து வெளிப்படையான வார்த்தையில் ஹாஃபிஸ் சாஹிப் நீங்கள் சந்தோஷமாக இருக்கிறீர்களா? எப்போது வந்தீர்கள்? என கேட்டார்கள். நான் கூறினேன். ஹுஸூர் நான் இப்போது தான் வந்தேன். அவர் இவ்வாறு எழுதுகிறார். இந்த விஷயம் கூறுவதற்கு தகுதியானதாகும். அந்த சந்தோஷம் இன்று வரை என் உள்ளத்தில் உள்ளது. அது என்னவென்றால், ஹுஸூர் நீங்கள் என்னை அறிவீர்களா?

என்று கேட்டேன். அவர்கள் கூறினார்கள். ஹாஃபிஸ்ஜி நீங்கள் யார் என்று அறியாதிருப்பேனா? இதைக் கேட்டவுடன் நான் சந்தோஷத்தில் பூரித்துப் போய் விட்டேன். ஏனென்றால் ஹுஸூர் (அலை) அவர்கள் எவரை நான் அறிவேனோ, யார் என்னை அறிவாரோ அவர் (பிளேக்) கொள்ளை நோயிலிருந்து காப்பாற்றப்படுவார் என கூறியிருந்தார்கள்.

நலம் விசாரித்தல் நடந்து கொண்டிருக்கும்போது இன்னும் சிலர் வந்து விட்டனர். உரையாடல் நடந்து கொண்டிருக்கும் போது சவுத்ரி ஹாகம் அலி சாஹிப் மணியாரி அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஹுஸூர் இன்று ஜுமுஆ ஆகும். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி வரவில்லை. இன்று ஜுமுஆ யார் தொழ வைப்பது? ஹுஸூர் (அலை) அவர்கள் எந்தவித தயக்கமுமின்றி கூறினார்கள். நமது ஹாஃபிஸ் சாஹிப் இருக்கிறார்களே. இவர்கள் தொழ வைப்பார்கள். நான் இதைக் கேட்டதும் என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை. நான் திகைத்துப் போய் விட்டேன். நான் ஒரு பாவப்பட்டவன். இக்காலத்தில் இறைவனால் அனுப்பப்பட்டவர் முன்னால் என்னால் எப்படி நிற்க முடியும்? பிறகு உள்ளத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. அதாவது ஜுமுஆவிற்கு இன்னும் நேரம் இருக்கிறது. அதற்குள் யாராவது வந்து விடுவார்கள் என எண்ணினேன். இறுதியில் ஜுமுஆவிற்கான நேரம் வந்து விட்டது. தொழுகையாளிகள் வரிசையில் வந்து அமர்ந்து விட்டனர். நானும் வரிசையில் வடக்குப் பக்கமாக அமர்ந்து விட்டேன். பாங்கு கொடுத்து விட்டனர். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஹாஃபிஸ் சாஹிப் எங்கே என வினவினார்கள். அப்போது யாரோ ஒருவர் என்னை ஹுஸூர் அவர்களிடம் ஒப்படைத்தார். அப்போது நான் ஹுஸூர் அவர்களின் காதில் மெதுவான குரலில் இவ்வாறு கூறினேன். ஹுஸூர் நான் பாவப்பட்டவன். உங்கள் முன்னால் நின்று பேசுவதற்கு எனக்கு தைரியமில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இல்லை; நீங்கள் முன்னே செல்லுங்கள். நான் உங்களுக்காக துஆ செய்கிறேன் என்று கூறினார்கள். என்னை முஸல்லாவில் நிறுத்தி விட்டார்கள். நானும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு குத்பா கொடுக்க ஆரம்பித்து விட்டேன். மேலும் சூரா ஃபுர்கானின் ஆரம்ப வசனங்களை ஓதினேன். இறைவனது அருளால் என்னால் முடிந்தவரை குத்பா நடத்தினேன். மேலும் நான் என்ன காண்கிறேன் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்காக துஆ செய்கிறார்கள். என்னுடைய இதயம் திறந்து கொண்டே சென்றது. எதுவரை என்றால் அன்றிலிருந்து இன்று வரை எந்தவொரு வாக்குவாதத்திலும் சொற்பொழிவிலும் திக்கியதே இல்லை. அல்ஹம்துலில்லாஹ் மின் ஸாலிக். இதன் விளைவாகத்தான் நான் 1933 –ல் ஹிஜ்ரத் செய்து காதியான் வந்த போது மஸ்ஜித் அக்ஸாவில் இமாமத் செய்வதற்கான பாக்கியம் கிடைத்தது என எண்ணுகிறேன்.

மேலும் இவ்வாறு எழுதுகிறார். நான் ஒரு முறை காதியான் சென்றிருந்த போது எதிரிகள் பொய் வழக்குகள் நடத்தியும், பொய்யான சத்தியம் செய்தும் எனது வீட்டை பிடுங்கி விட்டனர். இந்த வழக்கு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினேன். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஹாஃபிஸ் சாஹிப், மக்கள் திருமணம் மற்றும் கத்னா செய்வதற்காக தனது வீட்டை அழித்து விடுகின்றனர். தங்களுடைய வீடு இறைவனுக்காக போனது போகட்டும் விட்டு விடுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் இதை விட சிறந்த வீட்டை உங்களுக்கு தருவான். இந்த தூய்மையான வார்த்தையைக் கேட்டதும் வீட்டை பிடுங்கினார்கள் என்ற எண்ணம் போய்க்கொண்டேயிருந்தது. மேலும் கூறுகிறார். அல்லாஹ் எனக்கு இந்த தூய்மையான கிராமத்தில் இடம் கொடுத்தான். வீடு அதை விட பல மடங்கு தகுதியான வீட்டை எனக்கு வழங்கினான். மனைவி மக்களையும் கொடுத்தான்.

இது தொடர்பாக இன்னொரு விஷயம் நினைவிற்கு வந்தது. அதையும் எழுதுகிறார். நல்ல இயல்புடையவர்கள் இதன் மூலம் பயன் பெறலாம். அது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மஸ்ஜித் முபாரக்கில் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் மத்ரஸா அஹ்மதிய்யாவில் படிக்கின்றார்கள். முல்லாவாக ஆவீர்களா? என கேட்டார். அவர்கள் என்ன செய்வார்கள்? தப்லீக் செய்வது நமது கடமையாகும் என பொறுமையாக கூறினார். மத்ரஸா அஹ்மதிய்யாவை மூடிவிட வேண்டும் என்றும் கூறினார். அப்போது அங்கு ஹஸ்ரத் மிர்ஸா மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள்

அமர்ந்திருந்தார்கள். அவர் தான் ஒரு உறுதிமிக்கவர் என்பதை நினைவூட்டும் வகையில் இவ்வாறு கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மத்ரஸா அஹ்மதிய்யா இதில் உலமா படித்து வருபவர்கள், உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைப்பார்கள். இதைக் கேட்டவுடன் காஜா சாஹிப் திகைத்து விட்டார். அப்போது நான் காஜா சாஹிப் எப்போதுமே தமது எண்ணத்தில் வெற்றி பெற முடியாது என புரிந்திருப்பார் என எண்ணினேன்.

பார்க்கக்கூடியவர்கள் இன்று பார்க்கின்றனர். இந்த அஹ்மதிய்யா மத்ரஸாவில் கல்வி பெற்றவர்கள்தான் இன்று முழு உலகிலும் உண்மையை எட்ட வைப்பதற்கான பணியை செய்து கொண்டிருக்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி பேசினாலே உடனே கொலை செய்யப்பட வேண்டியவர் என கூறியவர்களுக்கு எதிராக இவர்கள் செயல்படுகின்றனர்.

ஒருநாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நடைப்பயணதிற்காக சென்ற போது நானும் இன்னும் சிலரும் அவர்களுடன் சென்றோம். அவர்களில் ஒருவர் சியால்கோட்டின் செயலரான நிஸாமுத்தீன் சாஹிப் ஆவார். (தற்போது வரை உயிருடன் உள்ளார்.) இவரும் உடனிருந்தார். இவர் என்னிடம் கூறினார். ஹஸ்ரத் சாஹிப் மிகவும் அன்பாக உங்களுடன் பழகுகிறார்களே, இதனால் தான் நான் இந்த கோரிக்கையை வைக்கிறேன். முந்தைய திருக்குர்ஆன் விரிவுரைகள் அனைத்தும் நம்பிக்கையின்றி உள்ளது. முந்தைய விளக்கவுரைகள் தற்போதைய காலத்திற்கேற்றார் போல் இல்லை ஹுஸூர்... எனவே புதிய திருக்குர்ஆன் விரிவுரையை தாங்கள் எழுத வேண்டும் என கோரிக்கையாக கூறினேன். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், ஹாஃபிஸ் சாஹிப் அவர்களே! என்னுடைய பார்வையில் இந்த காலத்திற்கேற்ப எந்த வசனங்களுக்கு தஃப்ஸீர் எழுத வேண்டுமோ அதற்கு நான் விளக்கவுரை எழுதிவிட்டேன். நானோ அல்லது நாமோ யாராவது திருக்குர்ஆனுக்கு முழுமையாக விளக்கவுரை எழுதினால் பிற்காலத்தில் வரக்கூடிய காலகட்டங்களில் அதிகமான ஆட்சேபனைகள் கிளம்பி விடும். இந்த ஆட்சேபனையாளர்களுக்கு பதில் அளிப்பதற்காக அல்லாஹ் வேறொருவனை தன் புறமிருந்து அனுப்புவான்.

இந்த பதிலைக் கேட்டு நான் அமைதியாகி விட்டேன். செயலாளர் நிஸாமுத்தீன் சாஹிபும் அமைதியாகி விட்டார். அந்த காலத்திற்கேற்ப தஃப்ஸீர்களும் வந்து விடும்.

முஹம்மது ஃபஸ்ல் சாஹிபின் புதல்வரான கான் சாஹிப் முன்ஷி பரக்கத் அலி சாஹிப் Direct General Indian Medical Service -ல் பணியாற்றினார்கள். நாஸிர் பைத்துல்மாலாக இருந்தார். 1901-ல் பைஅத் செய்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்தார்.

எனக்கு நினைவு இருந்த வரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றிய விஷயங்களை ஆரம்பத்தில் கேட்டேன். சிம்பாலில் ஒரு சில அஹ்மதி சகோதரர்களுடன் தங்குவதற்கான வாய்ப்பு கிடைத்தது. அங்கு ஹுஸூர் (அலை) அவர்கள் தவாவே மஸீஹிய்யத் மற்றும் வஃபதே மஸீஹ் நாஸிரி தொடர்பான கேள்வி - பதில் தொடங்கி விட்டது. நான் ஈஸா (அலை) அவர்களது மரணம் தொடர்பாக எதிர்த்து வந்தேன். ஆனால் வீண் பேச்சு, கேலி கிண்டலிலிருந்து எப்போதுமே விலகியிருந்தேன். ஈஸா (அலை) அவர்களின் மரணத்தில் எந்த விதமான நம்பிக்கையும் எனக்கு இல்லை. எதிரிகள் எவ்வாறு தற்போது தீய வார்த்தைகளால் ஏசுகின்றனதோ அவ்வாறு செய்ததில்லை. நல்ல பண்புடையவராக இருந்தார். நாளாக நாளாக அதில் நம்பிக்கை வந்து விட்டது. அப்போது அந்நாட்களில் ஹுஸூர் (அலை) அவர்கள் பீர் மெஹர் அலி சாஹிபுடன் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் தன்னுடன் போட்டியிடுபவரிடம் திருக்குர்ஆனின் வசனத்திற்கு அரபி விளக்கவுரை எழுதும்படி வலியுறுத்தினார்கள். மேலும் இதை சீட்டு குலுக்கி போட்டு ஏதாவது ஒரு அரபி சூராவை தேர்ந்தெடுத்து அதற்கு அரபியில் விளக்கவுரை எழுத வேண்டும். ஏனென்றால் திருக்குர்ஆனின் வாதம் என்னவென்றால், தூய்மையான உள்ளம் கொண்டவர்களைத் தவிர, இந்த குர்ஆனை வேறு யாரும் அணுக முடியாது. ஒரு பொய்யன் மற்றும் இட்டுக்கட்டுபவர்களின் மீது திருக்குர்ஆனின் உண்மைத்துவமும் ஞானமும் வெளிப்படாது. இவ்வாறு இரண்டு பிரிவினர்களுக்கிடையில்

உண்மை மற்றும் பொய் தெளிவாகி விடும். அதே நாளில் தான் கிறித்தவர்கள் சார்பாக ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீது 24 ஆட்சேபனைகளை எழுப்பி இருந்தார்கள். மேலும் அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தற்போதைய இஸ்லாத்திலிருந்து வெளியாகி விட்டார்கள் எனவும் குறிப்பிட்டிருந்தது. அந்த பிரசுரத்தில் அதிகமான இடங்களில் ஹுஸுர் (அலை) அவர்களின் புத்தகங்களிலிருந்து எடுத்து மாற்றி அமைத்திருந்தார்கள்.

இந்த சஹாபா கூறுகிறார். நான் அப்போது அஹ்மதி ஆகவில்லை. ஆனால் இரண்டு பிரிவினர்களின் பிரசுரத்தையும் பார்த்துக் கொண்டிருப்பேன். அப்போது மேலே குறிப்பிட்டுள்ள அந்த பிரசுரம் கிடைத்தவுடன் நான் அஹ்மதிகளிடம் இந்த மேற்கோள்கள் உள்ள மூல புத்தகங்களை கொண்டு வருமாறு கேட்டேன். அதன் மூலம் நனே நேரடியாக ஆராய்ந்து புரிந்து கொள்வேன். பிறகு ஆராய்ந்து பார்த்ததில் ஒரு சில ஆதாரங்கள் சரியாக இருந்தது. ஆனால் அதிகமான இடத்தில் பிரித்து திரித்து, மாற்றி அமைத்துள்ளார்கள். இதனை அவர்கள் தன்னுடைய வாதத்தில் நிலைத்து நிற்பதற்காக இவ்வாறு செய்துள்ளார்கள். இதே நிலைமைதான் இன்றும் நடக்கிறது. ஒரு புதிய திட்டத்தை எதிரிகள் கையாலுகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகங்களிலிருந்து ஆதாரங்கள் கொடுக்கப்படுகிறது. அதை திரித்து பிரித்து பெரிய பெரிய சுவரொட்டி பிரசுரம் மூலம் அல்லது புத்தக வடிவில் அதை வெளியிட்டு ஜமாஅத் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக தூண்டி விடுகிறார்கள். ராஹே ஹுதா போன்ற நம்முடைய நிகழ்ச்சிகளின் மூலம் இதற்கான பதில் அளிக்கப்படுகிறது. தற்போது அதற்கான இணையதளமும் தொடங்கி விட்டது. இதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூல புத்தகங்களிலிருந்து ஆதாரங்கள் கொடுக்கப்படுகிறது. அதை பாருங்கள். மக்கள் அதை பார்த்து பைஅத்தும் செய்கின்றனர். இந்த அவதூறுகளை எப்போதுமே மவ்லவிகள் பயன்படுத்தி வருகின்றனர். இது புதியதல்ல. மக்கள் பதற்றமடைந்து விடுகிறார்கள். நம்முடைய இணையதளம் ஆரம்பித்தவுடன் அதன் இன்சார்ஜ் பாஸித் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். நம்முடைய பதில் மக்களிடம் போய் சரியாக சேரவிடாமல் இவர்கள் தடுக்கின்றனர். நான் அவரிடம் கூறினேன். கொஞ்ச நாள் காத்திருங்கள். அவர்கள் தானாகவே ஒதுங்கி விடுவார்கள். இப்போது பாருங்கள். அவ்வாறே நடந்தது. ஒரு சில நாட்கள் கழிந்த பிறகு நமது தரப்பிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஆட்சேபனைகளுக்கான பதிலைக் கண்டு அமைதியாக ஒரு பக்கம் ஒதுங்கி விட்டார்கள். மாறாக அவர்கள் தங்களின் ஓர் இணையதளம் மூலம் மக்களிடம் இந்த இணையதளத்திற்குள் யாரும் செல்லாதீர்கள் என்று கூறி எழுதத் தொடங்கி விட்டனர். உண்மையில் இவர்களிடத்தில் இதற்கான பதில் இல்லை. எனவே மற்றவர்களையும் தடுக்கின்றனர். எவ்வாறிருந்த போதிலும் இந்த நடவடிக்கையானது எப்போதும் இருந்து வருகிறது.

அந்த சஹாபி கூறுகிறார். நான் புத்தகத்தை திறந்து பார்த்தால் ஆதாரம் இருந்தது. ஆனால் திரித்து பிரித்து கொடுக்கப்பட்டிருந்தது. பீர் மெஹர் அலி ஷா சாஹிப் ஹுஸுர் (அலை) அவர்களுக்கு எதிராக அரபி விளக்கவுரை எழுத முன்வந்த போது ஹுஸுர் (அலை) அவர்கள் இஃஜாஸில் மஸீஹ் (மஸீஹின் அருஞ்செயல் வெளிப்பாடு) என்ற புத்தகத்தை எழுதினார்கள். பீர் மெஹர் அலி ஷா சாஹிப் அவர்களுக்கு இந்த காலகட்டத்திற்குள் இதன் பதிலை எழுதுமாறு சவால் விட்டார்கள். மவ்லவி சாஹிப் அவர்கள் அரபியில் எந்த புத்தகமும் எழுதவில்லை. ஆனால் உருதுவில் எழுதினார். அதுவும் பின்னால் திருடி எழுதப்பட்டதாக நிரூபணமானது. இந்த இழுபறியில் இவ்வாறு நினைத்தேன். நபிமொழிகள் ஒரு மிகப்பெரிய புதையலாகும். அதை அணுகுவது கடினமாகும். ஆனால் அஹ்மதி சகோதரர்கள் அதிகமாக திருக்குர்ஆனின் ஆதாரங்களை தருகிறார்கள். எனவே திருக்குர்ஆனை ஆரம்பம் முதல் இறுதி வரை ஒரு முறை படிக்க வேண்டும் என்று நினைத்தேன். எனக்கு அரபி தெரியாது. என்னுடைய ஒரு நண்பருடன் இணைந்து திருக்குர்ஆனின் உருது மொழியாக்கத்தை படிக்க ஆரம்பித்தேன். இதிலிருந்து நான் தெரிய வந்தது என்னவென்றால், திருக்குர்ஆனில் ஒன்றிரண்டு வசனங்களோ இருபது முப்பது வசனங்களின் மூலமாகவோ ஈஸா (அலை) அவர்களின் மரணம் நிரூபணமாகவில்லை. மாறாக, எண்ணிலடங்கா வசனங்கள் இதை

நிரூபிக்கின்றது. 1901 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடந்தது. அப்போது ஹுஸுர் (அலை) அவர்கள் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் எவர் என் மீது உள்ளத்தளவில் ஈமான் கொள்கின்றாரோ அவர் தன்னை அஹ்மதி என்று கருதிக் கொள்ளலாம். பைஅத் செய்யா விட்டாலும் அப்போது எனக்கு நல்லெண்ணம் ஏற்பட்டது. பிறகு நான் சந்தா கொடுக்க ஆரம்பித்து விட்டேன். நான் பைஅத் செய்யவில்லை. ஆனால் மக்கள் தொகை கணக்கெடுப்பில் அஹ்மதி என்று எழுதி விட்டேன். ஒருநாள் கனவில் ஹுஸுர் (அலை) அவர்களின் தரிசனம் கிடைத்தது. அது காலை 4.00 மணி ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அடுத்த அறையில் அஹ்மதிகளை சந்திக்க வந்துள்ளார்கள். நான் ஹுஸுர் (அலை) அவர்களை சந்திப்பதற்காக சென்று, அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். அதற்குப் பதில் கூறியவாறு ஹுஸுர் (அலை) அவர்கள் வஅலைக்கும் ஸலாம் என்று கூறினார்கள். மேலும் ஹுஸுர் (அலை) அவர்கள் பரக்கத் அலி எங்கள் பக்கம் எப்போது வரப்போகிறீர்கள்? என கேட்டார்கள். ஹஸ்ரத் சாஹிப் நான் இப்போது வந்துவிடுவேன் என்று கூறினேன். ஹுஸுர் (அலை) அவர்கள் அப்போது கட்டிலில் அமர்ந்து கொண்டிருந்தார்கள். உடலில் சட்டையில்லாமல் இருந்தார்கள். தலை முடி நீளமானதாக இருந்தது. அப்போது சில நாட்களுக்கு பிறகு நான் பைஅத் செய்து விட்டேன். அப்போது கண்ட கனவுக் காட்சி இதுவரை விழித்துக் கொண்டிருக்கும் போது கண்டது போல் நினைவில் உள்ளது. அதன் பிறகு காதியான் மாநாட்டின் சந்தர்ப்பத்தில் தாருல் அமானில் சென்று அவர்களது கையில் பைஅத் செய்து விட்டேன். அப்போது நான் ஹுஸுர் (அலை) அவர்களின் அருள்வாய்ந்த முகம் நான் கனவில் கண்டது போல் இருந்தது. சில நாட்களுக்குப் பிறகு அங்குள்ள விருந்தினர் மாளிகையில் நான் வந்து இறங்கிய போது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் எம்.ஏ. தங்கியிருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகன் ஆவார்கள். நான் ஒரு கட்டிலில் அமர்ந்தேன். எனக்கு முன்னால் ஒரு உயரமான மாடியில் ஹுஸுர் (அலை) அவர்கள் குளித்து விட்டு வந்தார்கள். அவர்களுடைய உடல் சட்டையில்லாமல் இருந்தது. அவர்களுடைய தலை முடி நீளமாக இருந்தது. இதைப் பார்த்தவுடன் கனவில் கண்ட காட்சி நினைவிற்கு வந்தது. இந்த கனவு அல்லாஹ் என்னுடைய நேர்வழிக்காகத்தான் காட்டினான் என்ற நம்பிக்கை எனக்கு அதிகரித்து விட்டது.

மேலும் கூறுகிறார். ஒருமுறை ஹுஸுர் (அலை) அவர்கள் மஸ்ஜித் முபாரக்கிலிருந்து ளுஹர் தொழுகை முடித்து விட்டு ஜன்னல் வழியாக சென்றார்கள். அப்போது வழக்கம்போல் மக்கள் அவர்களை சூழ்ந்து கொண்டார்கள். ஒருவர் கையை முத்தமிடுகிறார். ஒருவர் உடலில் கையை தடவி தன் முகத்தில், மார்பில் தடவிக் கொள்கிறார். நானும் அவர்களுடன் இருந்தேன். அப்போது ஹஸ்ரத் நூருத்தீன் (ரலி) அவர்கள் அருகில் சென்றார்கள். அப்போது கூறினார்கள். நேர்மை அவசியம் வேண்டும்; இது இல்லையென்றால் வெளிப்படையான முத்தமிடுவது, உடலை தழுவுவது எல்லாம் ஒரு பொருட்டே அல்ல. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவருக்கு இந்த போதனையை வழங்கினார்கள். எனவே நான் அப்போதிருந்து முழுமையான பற்றுதலுடன் உறுதியாக இருப்பதற்காகவே முயற்சி செய்கிறேன்.

மேலும் இவர் எழுதுகிறார்: ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸ்ஜித் முபாரக்கில் ளுஹர் தொழுகைக்குப் பிறகு பள்ளியில் அமர்ந்திருந்தார்கள். அப்போது 2, 3 ஆரிய சகோதரர்கள் தங்களை சந்திப்பதற்காக ஆவலாக உள்ளார் என்று கூறப்பட்டது. ஹுஸுர் (அலை) அவர்கள் அவர்களை உள்ளே அழைத்தார்கள். பிறகு பேச்சுவார்த்தை ஆரம்பித்து விட்டது. ஈடேற்றம் தொடர்பான விஷயம் வந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முகம் எந்த அளவு வெற்றியுடன் காணப்பட்டதென்றால், ஆரியர்களால் வெளிப்படையாக பேச முடியவில்லை. எதுவரை என்றால் அவர்கள் இவ்வாறு கூறத்தொடங்கினர். அதாவது ஈடேற்றத்திற்காக வேதத்தின் கூற்றின்படி நடப்பது அவசியமில்லை எனக் கூறினார். மாறாக எவர் நல்ல பணியை செய்வாரோ அவர் ஈடேற்றத்தின் வழியை அடைவார்.

மீண்டும் எழுதுகிறார்: ஒருமுறை மஸ்ஜித் அக்ஸாவில் ஜுமுஆ தொழுகை தொழுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்து தமது தந்தையின் கல்லறையின் அருகில் அமர்ந்திருந்தார்கள். நானும்

சந்தர்ப்பம் பார்த்து அவர்களது அருகில் அமர்ந்து விட்டேன். தொழுகையில் ஹுஸூர் (அலை) அவர்கள் எவ்வாறு தொழுகிறார்கள் என்ற அவர்களது அசைவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகையில் நிற்கும் போது கையை நெஞ்சில் கட்டினார்கள். ஆனால் விரல்கள் கை முட்டி வரை போகவில்லை. கழுத்து வலது புறம் தாழ்வாக இருந்தது. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அஸர் தொழவா வேண்டாமா என்ற பிரச்சனை வந்தது. அன்று ஹுஸூர் (அலை) அவர்களின் அனுமதியுடன் அஸர் தொழுகை ஜம்அ செய்து தொழப்பட்டது. ஹுஸூர் (அலை) அவர்களின் கடைசிக் காலத்தில் ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் முன்னேற்றம் அடைந்து கொண்டே சென்றது. மேலும் 600, 700 மக்கள் காதியான் ஜல்ஸாவில் கலந்து கொண்டார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எண்ணத்திற்கேற்ப ஜல்ஸாவில் வந்திருப்பவர்கள் பஜாரைக் கடந்து செல்லும்படி கூறப்பட்டது. அதன் மூலம் இந்துக்கள், அஹ்மதி சகோதரர்கள் இறைவனுடைய வஹி முழுமை பெற்றதை அறியட்டும். மேலும் எவ்வாறு மக்கள் தொலைதூரத்திலிருந்து இங்கு வருகின்றார்கள் என்பதையும் பார்க்கட்டும். எனவே அதேபோல் செய்யப்பட்டது. இன்றுள்ள அஹ்மதிகளுக்கு அல்லாஹ்வின் அருளின் மீது அதிகமாக முறையில் நன்றி செலுத்த வேண்டும் என்பதை சிந்தியுங்கள். அந்தக் காலத்தில் மூத்தவர்களுடைய சந்ததிகள் இன்று உலகில் பரவியுள்ளார்கள். அவர்களின் ஒவ்வொரு சந்ததியும் நூற்றுக்கணக்கில் பரவியுள்ளார்கள். அது தவிர புதிதாக வருபவர்களும் உள்ளார்கள். காதியானிலுள்ள தெருக்களில் நம்முடைய எண்ணிக்கை அதிகமாகி விட்டது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். இன்று முழு உலகமும் காதியானைப் பற்றி தெரிந்திருக்கிறது. தொலைக்காட்சியில் வருகின்றது. செய்தித்தாள்களில் வருகின்றது. எனவே அல்லாஹ்விற்கு எவ்வளவுதான் நன்றி செலுத்தினாலும் அது குறைவானதே ஆகும்.

மேலும் எழுதுகிறார்கள். அப்போது ஒரு விருந்தாளி காதியானை விட்டு போகிறார்கள் என்றால் அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் அனுமதி பெற்று செல்லக் கூடிய பழக்கம் நடைமுறையில் இருந்தது. எனவே நானும் மாலை விடை பெறுவதற்காக அனுமதி கேட்டேன். அப்போது அனுமதி அளிக்கப்படுகிறது என்று கூறினார்கள். காலையில் போகும் போது தகவல் கொடுக்கவும். அதேபோல் நான் காலையில் போகும் போது தகவல் அனுப்பினேன். ஹுஸூர் (அலை) அவர்களே நேரில் வந்து வழியனுப்பினார்கள். அவர்களுடன் வேறு சில சகோதரர்களும் இருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் மண்ணினால் ரோடு அமைக்கப்பட்ட தெருவின் முனை வரை வந்து வழி அனுப்பி வைத்தார்கள். வழியில் பலவிதமான பேச்சுவார்த்தைகள் நடந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் மெதுவாகவும் பொறுமையாகவும் நடந்து வந்தார்கள். ஆனால் வண்டியோ மிக வேகமாகச் சென்றது. குத்தாம்களுக்கு முயற்சி செய்து கூடவே வரவேண்டியதிருந்தது. குழந்தைகளோ ஓடியே வந்தனர்.

மீண்டும் எழுதுகிறார்: அதாவது சுமார் 1900 ஆம் ஆண்டில் பங்களாதேஷின் பிரிவின் போது மனிதனின் உரிமை என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் கிளர்ச்சியை எப்போதும் விரும்பியதில்லை. தன் ஜமாஅத்தினரும் எப்போதும் விசுவாசமுள்ளவர்களாக இருக்கும்படி கூறிக் கொண்டே இருப்பார்கள். இந்த ஆணைகளைக் கொண்டு நான் ஒரு கட்டுரை எழுதி ஹுஸூர் அவர்களின் சந்நிதானத்திற்கு அனுப்பி வைத்தேன். ஹுஸூர் (அலை) அவர்கள் அந்த கட்டுரையை பத்ர் பத்திரிகையில் வெளியிடுவதற்காக அனுப்பி வைத்தார்கள். இன்றைய காலகட்டத்தில் ஒருசில நாடுகளில் நிலவும் தற்போதைய கிளர்ச்சியான நிலைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை.

மீண்டும் எழுதுகிறார்: ஹுஸூர் (அலை) அவர்கள் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு அமர்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு நண்பர் இலாக்காவின் தாஸில்தார் காலை மினாராவின் கட்டிடப் பணிக்காக சந்தர்ப்பம் தேடி வருகிறார் என கூறினார். ஹுஸூர் (அலை) அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்ட விரும்பினார்கள். அதற்கு முன்னால் உள்ள சம்பவம் இது. ஆனால் காதியானிலுள்ள இந்துக்கள் இதற்கு

எதிர்ப்பு தெரிவித்தார்கள். அவர்கள் அரசாங்கத்தில் மினாரா கட்டுவதற்கான அனுமதி கொடுக்க வேண்டாம் என விண்ணப்பித்திருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் தாஸில்தாரின் வருகை தொடர்பாக இவ்வாறு கூறினார்கள். மிகவும் நல்லது. நம்முடைய நண்பர்கள் அவர்களை நல்ல முறையில் வரவேற்க வேண்டும். மேலும் மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்கான இடத்தையும் காண்பிக்கவும். மேலும் கூறினார்கள். இது அல்லாஹ்வின் தீர்மானம் ஆகும். மினாரத்துல் மஸீஹ் கண்டிப்பாக கட்டப்படும். இதை யாராலும் தடுக்க முடியாது. பிறகு இறைவனின் அருளால் மினாரா கட்டப்பட்டது.

மேலும் அவர் ஹுஸூர் (அலை) அவர்கள் எவ்வாறு அமர்வார்கள். எவ்வாறு நடப்பார்கள் என்பதை எழுதுகிறார். அவையில் ஹுஸூர் (அலை) அவர்களின் கண்கள் கீழே குனிந்தவாறு இருக்கும். ஏறக்குறைய கண் மூடியது போன்றே தெரியும். ஹுஸூர் என் பக்கம் கண்களை உயர்த்திப் பார்க்கும் போது என்னால் கட்டுப்படுத்த முடியாமல் கீழே பார்க்கத் தொடங்கி விடுவேன்.

இது கடைசி நாட்களின் சம்பவமாகும். ஒருமுறை நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களை சந்திப்பதற்காக ஹுஸூர் (அலை) அவர்களிடம் அனுமதி கேட்டேன். அப்போது அவர்களுக்கு 17, 18 வயது இருக்கும். ஹுஸூர் (அலை) அவர்கள் அனுமதி அளித்து விட்டார்கள். மேலும் மேலே உள்ள அறையில் என்னை அழைத்தார்கள். நான் ஹுஸூர் (அலை) அவர்களிடம் இவ்வாறு கேட்டேன். நான் அஹ்மதி ஆவதற்கு முன் ஒரு ஃபண்ட்டில் சேர்ந்திருந்தேன். அதன் பெயர் Fortune fund ஆகும். 16, 17 ஆட்கள் இருந்தார்கள். மாதம் 50 பைசா சந்தா வசூலிக்கப்பட்டது. பிறகு அந்த தொகையை லாட்டரி இடப்பட்டு அதன் லாபத்தை பங்கு பிரித்துக் கொள்வோம். இது அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகும் இந்தப் பணி தொடர்ந்தது. ஒருமுறை எங்கள் பெயரில் ஒரு லட்சத்து பதினைந்தாயிரம் ரூபாய் லாட்டரி விழுந்தது. என்னுடைய பங்கில் 7500 ரூபாய் வந்தது. இது ஆகுமானது என்று எனக்கு தோன்றியது. ஹுஸூர் அவர்களிடம் இது தொடர்பாக கேட்ட போது ஆகுமானதில்லை என்று கூறினார்கள். இந்த தொகையை இஸ்லாத்தைப் பரப்புவதற்காக செலவு செய்ய வேண்டும். ஏனென்றால் அல்லாஹ்வுக்கு எந்தப் பொருளும் ஹராமானது இல்லை. பிறகு அவர் இந்த பணத்தில் கொஞ்சம் சந்தா கொடுத்தார். மீதியை ஏழைகளுக்கு கொடுத்து விட்டார்.

ஹஸ்ரத் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் தந்தை பெயர். மதிப்பிற்குரிய சவுத்ரி ஜமாலுத்தீன் சாஹிப் குர்தாஸ்பூர் அவர்களிடமிருந்து ஒரு அறிவிப்பு உள்ளது. இவர் பிறப்பால் ஓர் அஹ்மதி ஆவார். அவர் கூறுகின்றார்: 1904 ஆம் ஆண்டில் நான் 20 வயதில் இருக்கும் போது கரம்தீன் ஜெஹ்லமில் வழக்கு நடைபெற்றது. தீர்ப்புக்குரிய நாளாக இருந்தது. நான் எனது கிராமத்திலிருந்து ஒருநாள் முன்னதாகவே அங்கு சென்று விட்டேன். அங்கு ஒரு மாளிகையில் ஹுஸூர் (அலை) அவர்களும் தங்கியிருந்தார்கள். கோடை காலமாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு அறையில் அமர்ந்திருந்தார்கள். அங்கு என் தந்தையார் மியான் ஜமாலுத்தீன் சாஹிப், மியான் நவாபுத்தீன் சாஹிப் சேக்வானி மற்றும் சவுத்ரி அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்களும் இருந்தார்கள். நான் சென்று ஹுஸூர் (அலை) அவர்களுக்கு விசிறியைக் கொண்டு வீசத் தொடங்கினேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என் தந்தையாரை நோக்கி மியான் இஸ்மாயீல் அவர்கள் வந்து இங்கு பலன் பெற்றார்கள். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு ஒரு சிறிய தொண்டு செய்வதன் மூலம் எந்த அளவிற்கு சந்தோஷமாக இருக்கிறது என்று இப்போது நினைத்துப் பார்த்தாலும் சிலிர்த்து விடுகிறது.

முஹம்மத் அக்பர் சாஹிப் தந்தை பெயர் இக்வாத் ரஹீம் பக்ஷ் சாஹிப். பட்டான் சமுதாயத்தை சார்ந்தவர் சக்னாபேரா ராஸி கான் எழுதுகிறார். எனது தந்தையாரின் சிறிய தகப்பனார் இக்வந்த் அமீர் பக்ஷ் கான் சாஹிப் முஸஃப்பர்சாபாத் மாவட்டத்தில் சப் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்தார். நான் அஹ்மதியான பிறகு அவர் பென்சன் பெறுவதற்காக டேரா ராஸிகான் வந்து விட்டார். அன்றைய தினங்களில் ஜமாஅத் அஹ்மதிய்யா டேரா ராஸிகான் ஸர்கந்தா மவ்லவி அஸீஸ் பக்ஷ் சாஹிபும் மவ்லவி முஹம்மது சமீ சாஹிப் அமீர். பைகாமியர்களின் அமீராக இருந்தவர். பின்னால் அமீராக இருந்தவர். பின்னால் அமீராக ஆனார்.

இவர் அப்போது அரசாங்க ஊழியராக பணிபுரிந்து கொண்டிருந்தார். அங்கு ஒரு பாழடைந்த பள்ளி இருந்தது. அஹ்மதிய்யா ஜமாஅத் அந்த பள்ளியை அருள்களால் நிரப்பியது. அதில் தொழ ஆரம்பித்து விட்டார்கள். ஃபஸ்லே ஹக் என்ற ஒரு அஹ்மதியல்லாத மவ்லவி அந்தப் பகுதியில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி அங்குள்ள மக்களை அஹ்மதிகளுக்கு எதிராக தூண்டி விட்டார். அன்றும் அதே வேலைதான் நடந்தது. இன்றும் இவ்வாறே நடக்கிறது. அஹ்மதிகளை இந்த பள்ளியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என மக்களை தூண்டி விட்டனர். மேலும் அந்த பள்ளிவாசலில் சில மாணவர்களை ஒன்றுசேர்த்து அவர்களுக்கு படித்துக் கொடுக்க ஆரம்பித்து விட்டனர். மத்ரஸாவின் மாணவர்களின் துணையுடன் ஊர்வலம் செல்வது, கலவரம் செய்வது இன்றும் கூட அப்படியே நடக்கிறது. ஆனால் ஒரு சில மாணவர்களை ஒன்றுசேர்த்து படித்துக்கொடுக்கிறோம் என்று கூறினார். தொழுகை நேரத்தில் தனது மாணவர்களுடன் தனியாக ஜமாஅத் நடத்தி தொழுதார். மேலும் பள்ளியில் பயான் செய்யவும் தொடங்கி விட்டார். என்னுடைய உறவினரான சிறிய தந்தை இக்வந்த் அமீர் பக்ஷ் கான் அவர்கள் டேரா ராஸி கான் நகரத்தின் போலீஸ் S.I. அவர்களை தூண்டி விட்டார்கள். இங்கு முஹல்லாவில் அஹ்மதி மற்றும் அஹ்மதி அல்லாதவர்களுக்கு குழப்பம் ஏற்படுகின்ற நிலை உருவாகாதிருக்கிறது. எனவே, நீங்கள் இது தொடர்பாக அறிக்கை செய்யவும், இருபிரிவினரும் ஜாமீன் தொகை செலுத்த ஆணை பிறப்பிக்க வேண்டும். இங்கு இந்த பள்ளிவாசல் பாழடைந்து இருந்த போது யாரும் வரவில்லை. அஹ்மதிகள் அதை எடுத்து பராமரிக்க ஆரம்பித்தவுடன் குழப்பங்கள் ஆரம்பித்து விட்டன. அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் தனது உறவினரான பாட்டனாரைப் பற்றி குறிப்பிட்டிருந்தார். பிறகு எழுதியிருந்தார். அதாவது இவருக்கு எந்த அளவிற்கு பகைமை என்றால் அவனால் முடிந்தால் எங்களை வெட்டிப் போட்டிருப்பான். ஜமாஅத் தொடர்பாக அவன் போலீஸில் கொடுத்த அறிக்கை தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தார். துஆவிற்காக விண்ணப்பித்திருந்தார். ஹுஸுர் (அலை) அவர்கள் தங்கள் அருளுக்குரிய கரங்களால் அந்தக் கடிதத்தின் பின்புறத்தில் பதிலை எழுதி எனக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தார்கள். ஹுஸுர் (அலை) அவர்களின் கடிதத்தின் கருத்து என்னவென்றால் நாம் ஒருபோதும் பதற்றமடையக் கூடாது. மேலும் மிக விரைவில் ஒரு நல்ல விளைவு ஏற்படும் என துஆ செய்தார்கள்.

மேலும் கூறினார். ஜமாஅத் ஒருபோதும் ஜாமீன் தொகை கொடுக்கக் கூடாது. இந்த பள்ளிவாசலுக்காக விட வேண்டியது வந்தால் விட்டு விடுங்கள். தற்போது ஏதாவது ஒரு அஹ்மதி வீட்டில் தொழுகையை நடத்துங்கள். ஆனால் ஜமாஅத்தின் எந்த நபரும் ஜாமீன் தொகை கொடுக்கக் கூடாது. இந்த கடிதம் என்னிடம் பாதுகாப்பாக இருந்தது. பின்னர் மவ்லவி அஸீஹ் பக்ஷ் சாஹிப் அவர்கள் என்னிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள். மேலும் கடிதத்தை திருப்பித்தரவில்லை.

மேலும் அவர் கூறுகிறார்: ஹுஸுர் (அலை) அவர்களுடைய பதில் வந்த சில நாட்களுக்கு பிறகு இவருடைய பாட்டனார் நோய்வாய்ப்பட்டார். மேலும் நோயுற்றிருந்த நிலையிலேயே சில நாட்கள் வாழ்ந்து மரணித்து விட்டார். S.I தாக்கல் செய்த அறிக்கையை Superintendent of Police அவர்கள் டெபுட்டி கமிஷனர் பகதூரிடம் அனுப்பி வைத்தார். இவர் A.C.ஐ இந்த வழக்கை கண்காணிக்குமாறு நியமித்தார். இதன் மூலம் இரு பிரிவினருக்கு இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டது. ஆனால் முயற்சி பயனளிக்கவில்லை. இறுதியில் இறைவனிடமிருந்து தீர்ப்பு வந்தது. இவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. சிந்து நதியிலிருந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் நகரத்தின் அந்த பகுதி தண்ணீரில் மூழ்கி விட்டது. பள்ளிவாசல் விழுந்து விட்டது. முழு நகரமும் தண்ணீரில் மூழ்கி விட்டது. பிறகு புதிய நகரம் உருவாக்கப்பட்டது. அதில் ஜமாஅத் அஹ்மதிய்யா தன்னுடைய புதிய பள்ளிவாயிலைக் கட்டியது. புதிய நகரத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் தான் முதல் பள்ளிவாயிலை கட்டியுள்ளது என நான் எண்ணுகிறேன்.

ஹஸ்ரத் நிஸாமுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள். இவரது தந்தை பெயர் அல்லாதத்தா சாஹிப் சன்னாவசோகி, சியால்கோட்டியைச் சேர்ந்தவர். அவர் எழுதுகிறார். நவம்பர் மாதம் 1904 ஆம் ஆண்டின் சம்பவமாகும். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சியால்கோட்டி வந்திருந்தார்கள்.

அடியேனும் ஹுஸூர் அவர்களைப் பார்ப்பதற்காக அங்கு சென்றிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய அறிவுரையை, ஹஸ்ரத் மிர்ஸா ஹகீமுத்தீன் சாஹிப் மர்ஹூம் அவர்கள் ளுஹர் தொழுகைக்குப் பிறகு ஜமாஅத் சகோதரர்களுக்கு இவ்வாறு கூறினார்கள். மக்கள் உங்கள் உணர்ச்சிகளை தூண்டுவதற்காக என்னை ஏசுகிறார்கள். ஆனால் நீங்கள் ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு ஒருபோதும் உணர்ச்சியில் வந்து விடாதீர்கள். மேலும் பதிலுக்கு நீங்களும் ஏசாதீர்கள. நீங்கள் பதிலுக்கு அவர்களை ஏசினால் அவர்கள் என்னைத்தான் ஏசுவார்கள். அப்போது அந்த ஏச்சுப் பேச்சுக்கள் அவர்கள் சார்பாக இருக்காது. மாறாக உங்கள் சார்பாக இருக்கும். மாறாக நீங்கள் ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டு அதற்குப் பதிலாக துஆ செய்யுங்கள். அவர்களுடன் அன்புடனும் பாசத்துடனும் நடந்து கொள்ளுங்கள். இதன் மூலம் அவர்கள் உங்கள் அருகில் வருவார்கள். இதன் பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் தொடர்பாக கூறினார்கள். குஃப்பார் அவர்களை ஏசினார்கள். பலவிதமான துன்பங்களை கொடுத்தார்கள். இதற்குப் பதிலாக சஹாபாக்கள் நன்மை மற்றும் அரவணைப்புடன் அவர்களிடம் நடந்து கொண்டார்கள். இவ்வாறு நடந்ததன் காரணமாக குஃப்பார்களில் அதிகமானவர்கள் இவர்களுடைய நடத்தைகளைப் பார்த்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். எனவே நீங்களும் அதே அடிச்சுவட்டைத்தான் பின்பற்ற வேண்டும்.

பிறகு அவர் கூறுகிறார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கருத்து இதுதான். மூலச்சொல் அல்ல. அதன் சுருக்கத்தை இங்கே இவர் தன்னுடைய வார்த்தைகளில் கூறியுள்ளார்.

ஹஸ்ரத் மஸீஹ் அப்துல்லாஹ் சாஹிப் அஹ்மதி முஹல்லா இஸ்லாமாபாத் சியால்கோட் நகரத்தை சார்ந்தவர். இவர் 4 நவம்பர் 1902 ஆம் ஆண்டில் பைஅத் செய்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சியால்கோட் சென்றிருந்த போது 13 வயதில் பைஅத் செய்தார்கள். ஒரு கனவின் மூலம் இவர் பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்களிடமிருந்து கல்வியையும் இவர் கற்றுள்ளார்.

இவர் எழுதுகிறார்: சியால்கோட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய வாதத்திற்கு பிறகு நவம்பர் 4, 1902 ல் காதியானுக்கு சென்று விட்டார்கள். அங்கிருந்த ஹுஸூர் (அலை) அவர்கள் சியால்கோட்டில் அஹ்மதிகளுக்கு துன்பம் கொடுத்தவர்களின் பட்டியலைக் கேட்டார்கள். அந்த பெயர்கள் எழுதி அனுப்பிய பிறகு சில நாட்களில் சியால்கோட்டில் பிளேக் நோய் பரவியது. எல்லா வல்லமையுள்ளவனாகிய இறைவன் அந்த குடும்பங்களை தேர்ந்தெடுத்து கடுமையான தண்டனைக்கு ஆளாக்கி அழித்து விட்டான்.

**எனவே கண்ணுள்ளவர்களே படிப்பினையைப் பெற்றுக் கொள்ளுங்கள். (59:3)**

பிளேக் நோய் பரவிய அந்த நாட்களில் ஒரு எதிரி இருந்தான். அவனுக்கு பிளேக் நோய் வந்ததும், அவன் ஹகீம் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்களை அழைத்தான். அவர் வந்து இவ்வாறு கூறினார். இது ஒரு கருநாகமாகும். அதன் அருகில் செல்ல வேண்டாம். அந்த நபர் மரணத் தருவாயில் இருக்கும் போது அவனுடைய மனைவி பாசத்தின் காரணமாக அவனைக் கட்டித் தழுவினாள். அந்தப் பெண் உண்மையிலேயே மரணத்தை தழுவி விட்டாள். அதேபோன்று அவனது பெண் குழந்தையும் செய்தது. இவ்வாறாக அந்த குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் அழிந்து விட்டார்கள்.

மேலும் கூறுகிறார்: ஒருமுறை ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களிடம் உங்களுக்கும் வெளிவேஷம் வெளிப்பட்டுள்ளது என கேட்டார்கள். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் அதற்கு பதிலளித்தவாறு கூறினார்கள். ஒரு மனிதன் காட்டில் விலங்குகளுக்கு முன்னால் தொழுது கொண்டிருக்கும் போது அவன் உள்ளத்தில் வெளிவேஷம் வெளிப்படுமா? எனது நிலையும் அதுபோன்றதுதான்.

ஹஸ்ரத் முஹம்மத் யஹ்யா சாஹிப். தந்தை பெயர் அன்வார் ஹுஸைன் சாஹிப் நர்கோயி மாவட்டம் ஷஹ்பாதை சேர்ந்தவர். 1894 ஆம் ஆண்டில் இவர் பிறந்தவர். 1904 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்தித்தார். இவர் கூறுகிறார்: எனது தந்தையார் மவ்லவி அன்வர் ஹுஸைன் கான் சாஹிப் மர்ஹூம் உத்திரபிரதேசத்திலுள்ள சக்னாஷாபாத் ஹர்கோயி மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1889 ஆம் ஆண்டில் லூதியானாவில் பைஅத் செய்தார்கள். அதற்கு சில காலத்திற்கு முன்பே கடிதத் தொடர்புகள் இருந்தது. பைஅத் செய்வதற்கான அனுமதி கொடுக்காததால் காதியான் செல்வதற்கு தடை இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லூதியானா சென்ற போது இவர் தன்னுடைய தகப்பனாருக்கு தகவல் கொடுத்தார். அவரது தந்தை மர்ஹூம் லூதியானா வந்து பயன்பெற்றார். என் தந்தையார் தேவ்பந்த்தின் சான்றிதழ் பெற்ற மவ்லவியாக இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருந்தோம்பல் தொடர்பான இந்த சம்பவத்தை எப்போதும் கூறிக்கொண்டே இருப்பார். அதாவது அவர் முதன்முதலில் 1892 –ல் காதியான் தாருல் அமானிற்கு சென்றிருந்தார். அங்கு அப்போது விருந்தாளிகளை கோல்கமரா வட்ட அறையில் தங்க வைத்திருப்பார்கள். நானும் அங்கேயே தங்கியிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் எங்களுடனே உணவு உண்பார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே எழுந்து சென்று உடனே போய் சட்னி, மற்றும் ஊறுகாய் கொண்டு வருவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறைவாக உண்பார்கள். விருந்தாளிகளுக்கு அதிகமாக வழங்குவார்கள். ஒருமுறை மஸ்ஜித் அக்ஸாவில் தொழுகையாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததைப் பார்த்து என் தந்தையார் கூறினார். முதல் முறையாக காதியான் வந்த போது மஸ்ஜித் அக்ஸாவில் மக்கள் நிறைந்திருப்பதைக் கண்டார்கள். ஒருமுறை நான் முதல்முறையாக காதியான் வந்தபோது ஜுமுஆ தொழுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸ்ஜித் அக்ஸாவிற்கு சென்றார்கள். வழியில் மவ்லவி சஅதி காஷ்மீரி அவர்களைச் சந்தித்தார்கள். இவரையும் மியான் ஜான் முஹம்மத் சாஹிப் அவர்களையும் தொழுவதற்காக அழைத்துச் சென்றார்கள். வழியில் ஒரு குழந்தையின் ஜனாஸா இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜான் முஹம்மத் சாஹிப் அவர்களை ஜனாஸா தொழ வைக்கும் படி கூறினார்கள். அதன் பிறகு மஸ்ஜித் அக்ஸா போய் சேர்ந்தார்கள். பின்னர் ஜுமுஆ தொழுதார்கள். அப்போது மொத்தம் ஆறு நபர்கள்தான் இருந்தார்கள். தற்பொழுது எழுதுகிறார்கள். பள்ளி விரிவாக்கப்பட்ட பிறகும் கூட அனைத்து தளங்களும் நிறைந்து காணப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆதலால் இதுவும் ஒரு அற்புதம் ஆகும்.

குழந்தைகள் மீது கருணை காட்டியது தொடர்பாக ஒரு சம்பவத்தை எழுதுகிறார் : நாங்கள் சிறு வயதுடையவர்களாக இருந்தோம். அப்போது தஃலிமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தில் தங்கியிருந்தோம். ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால் வேலை செய்வதற்காக நாங்கள் ஆர்வத்துடன் வருவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இது யார்? அது யார்? என்று குழந்தைகளைப் பற்றி விசாரிப்பார்கள். ஒருமுறை என்னைப் பற்றி விசாரித்தார்கள். அப்போது ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்கள், இவர் அன்வர் ஹுஸைன் சாஹிபின் மகன் என்று பதிலளித்தார்கள். அப்போது ஹுஸுர் (அலை) அவர்கள் நீ எந்த வேலையும் செய்ய வேண்டாம்; அமைதியாக அமர்ந்திருக்கவும் என்று கூறினார்கள். மற்ற குழந்தைகள் வேலை செய்து கொண்டிருந்தனர்.

ஒருமுறை கடுமையான குளிர் வந்தது. எந்த அளவுக்கென்றால் குட்டையில் உள்ள தண்ணீரெல்லாம் உறைந்து விட்டது. நான் வெப்பமான பகுதியில் வளர்ந்த காரணத்தினால் அதிகமான குளிரை உணர்ந்தேன். மேலும் தங்குமிடத்தில் உள்ள அனைத்து குழந்தைகளையும் விட நான் வயதில் மிகவும் சிறியவனாக இருந்தேன். ஃபஜ்ர் தொழுகை நேரத்தில் மிக அதிகமான குளிரை உணர்ந்தேன். மாஸ்டர் அப்துர் ரஹ்மான் சாகிப் மீர் சிங் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இவரைப் பற்றி கூறியிருப்பார்கள் என நினைக்கிறேன். இதைக் கேள்விப்பட்ட ஹுஸுர் (அலை) அவர்கள் குழந்தைகளுக்கு குளிர் அதிகமாக இருக்கும்; எனவே ஃபஜ்ர் தொழுகைக்கு அவர்களை பள்ளிவாசலுக்கு அனுப்ப வேண்டாம் எனக் கூறினார்கள். அந்நாளிலிருந்து எனக்கு குளிர்காலம் முழுவதும் தங்கியிருந்த இடத்திலேயே ஃபஜர் தொழுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒருமுறை நாங்கள் ஹுஸுர் (அலை) அவர்களுடன் ஆற்றிற்கு சென்றிருந்தோம். அது ரமலான் மாதமாக இருந்தது. மிகவும் தாகமாக இருந்தது. ஹுஸுர் (அலை) அவர்களுக்கு ஒரு சில குழந்தைகள் நோன்பு வைத்துள்ளார்கள் என தெரிந்தது. அப்போது ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள். இந்த குழந்தைகளை நோன்பு திறக்கச் சொல்லுங்கள்; சிறுவர்களுக்கு நோன்பு கடமையில்லை. இந்த கட்டளையின் அடிப்படையில் நாங்கள் ஆற்றுத் தண்ணீரை குடித்து தாகத்தை தீர்த்துக் கொண்டோம். ஹுஸுர் (அலை) அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு காதியான் வந்து சேர்ந்தோம். வெளியிலிருந்து வருபவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உணவு மேஜையிலுள்ள உணவுப் பொருட்களை மிகவும் விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள். நான் மிகவும் சிறுவனாக இருந்ததால் என்னுடன் தங்கியிருந்த சகோதரர்கள் கூறியபடி நான் ஹுஸுர் (அலை) அவர்களின் வீட்டிலிருந்து ரொட்டித் துண்டுகளை கொண்டு வருவேன். சாப்பாடு நேரம் வந்தவுடன் நான் ஹஸ்ரத் அம்மாஜான் (ரலி) அவர்களிடம் கேட்பேன். அவர்கள் கொடுத்து விடுவார்கள். சாப்பாடு நேரம் இல்லையென்றாலும் நான் போய் மக்களின் வேண்டுதல்களைக் கூறி உணவுப் பொருட்களை வாங்கி வருவேன். ஒரு ரொட்டி எடுத்தால் அதில் ஒரு வாய் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். மீதியைத் தந்து விடுவார்கள். அதை நான் சந்தோஷமாக கொண்டு வந்து எனது நண்பர்களுக்கு கொடுத்து விடுவேன்.

ஹுஸுர் (அலை) அவர்களின் தொழுகைகளின் உருக்கம் தொடர்பாக கூறுகிறார். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களது ஜனாஸாவை ஹுஸுர் (அலை) அவர்கள் தொழ வைத்தார்கள். தொழுகை மிக நீண்டதாக இருந்தது. எதுவரையென்றால் நான் களைத்துப் போய் விட்டேன். தொழுகைக்கு முன்பு மழையின் மேகம் தென்பட்டது. மேலும் புழுதி கிளம்ப ஆரம்பித்து விட்டது. தொழுகையின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை பெரிய துளிகள் கொண்ட மழை பெய்து கொண்டிருந்தது. ஸலாம் கொடுத்தவுடன் மழை நின்று விட்டது. சிறிது நேரம் கழித்தவுடன் வானம் திறந்து விட்டது. அல்லாஹ் இந்த பெரியார்களின் அந்தஸ்த்தை உயர்த்துவானாக. மேலும் இவர்களுடைய சந்ததிகளிலும் அஹ்மதிய்யத்தின் உயிரோட்டத்தை எப்போதுமே நிலைநாட்டுவானாக. நாம் நம்மை சீர்திருத்துவதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கான பாக்கியத்தை வழங்குவானாக. நம்முடைய ஈமான் அதிகரிக்கட்டும். வரக்கூடிய ஒவ்வொரு நாளும் நம் மீதும், நமது சந்ததிகள் மீதும் அஹ்மதிய்யத்தின் பற்று, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள பாசம் நேசம், திருக்குர்ஆனின் போதனைகளின்படி செயல்படக்கூடிய பாக்கியத்தை தந்தருள்வானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 08.04.2011**

Translated by : **Maulvi ABUL HASAN Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**